**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC. 107 /2018**

**Deposition of P.W.9**

Name : திரு. பரத்லிங்கம்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated:03.09.2025**

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது தென்காசி மாவட்ட தனிபிரிவில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் தக்கலை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது 26.03.2014ம் ஆண்டு காலை 11.30 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும் போது திரு. ஸ்டாலின் (28) த/பெ. சின்னையன் தனது இடது கையில் ரத்தக்காயத்துடன் நிலையம் ஆஜராகி கொடுத்தபுகார்மனுவை பெற்று அதன் தன்மைபடி நிலைய குற்ற எண். 265/2014 பிரிவுகள் 341, 294(பி), 387, 307, 506(2) இ.த.ச படி வழக்கு பதிவு செய்து காயம்பட்ட நபருக்கு மருத்துவ நமூனா கொடுத்து சிகிச்சைக்கு அனுப்பி வைத்தேன். முதல் தகவ்ல அறிக்கையின் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு, ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.3. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

காயத்தில் ரத்தம் வடிந்து கொண்டிருந்தது. காயம்பட்டவர் சட்டையை என்னிடம் கொடுக்கவில்லை. சட்டையில் ரத்தம் பட்டிருந்ததா என்று ஞாபகமில்லை. இடது முன்கையில் காயம் இருந்தது. சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி மீது பொய் வழக்கு போட்டுள்ளதாக என் மீது வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். சம்பவம் எதுவும் நடக்காமல் உண்மைக்கு மாறாக புகார் மனு பெற்று பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.